புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
ज्ञान-विज्ञान विमुक्तये
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# ஐங்குறுநூறு பாடல்களில் நகை மெய்ப்பாடு

*ஆய்வாளர்: சீ. லலிதா*
*Ref.No.34493/Ph.D.K6/Tamil/Full Time/October2013/Date:01.10.2013*
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,*
*தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 600 002*
*(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது) தமிழ்நாடு.*

ஆய்வுச்சுருக்கம்

எட்டுத்தொகை அகப்பாடல்களில் காணப்படுகின்ற பல்வேறு வகையான வாழ்க்கை முறைகளில் அகமாந்தர்களின் செயல்பாடுகள், வெளிப்பாடுகள் யாவும் உணர்ச்சிகளாக வெளிப்படுகின்றன. அவற்றிலும் குறிப்பாக தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் கூறப்பட்டுள்ள மெய்ப்பாட்டுக் கூறுகளில் ஒன்றான நகை மெய்ப்பாடு ஐங்குறுநூறு பாடல்களில் பொருத்திப்பார்த்து எந்தெந்த பாடல்களில் இடம்பெற்றுள்ளன என்பதனை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமையவுள்ளது. மெய்ப்பாடு குறித்து நூற்பாக்கள் மற்றும் இலக்கண நூல்கள் சுட்டிக்காட்டி விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. மெய்ப்பாடு வெளிப்படும் திறத்தினை நூற்பாக்கள் எடுத்துக்காட்டி விளக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் கூறும் மெய்ப்பாட்டின் வகைகள் விளக்கப்பட்டுள்ளது. அதனை இலக்குவனார் மொழிப்பெயர்த்த விதம் மேற்கோளுடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நகை மெய்ப்பாடு பற்றிய விளக்கங்கள், உரையாசிரியர்கள் கூறும் உரைகளின் மூலம் எடுத்தாளப்பட்டுள்ளது. நகையின் நிலைக்கலன்களான எள்ளல், இளமை, பேதைமை, மற்றும் மடமை ஆகியவற்றின்

நூற்பாக்களின் விளக்கம் மற்றும் அதன் ஆங்கில விளக்கமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நகை மெய்ப்பாடு அகப்பாடல்களில் எவ்விதம் இடம்பெற்றுள்ளது என்பது பற்றிக் குறுந்தொகைப் பாடல் ஒன்றின் மூலம் வெளிக்காட்டப்பட்டுள்ளது. ஐங்குறுநூறு பாடல் ஒன்றில் எள்ளல் சுவை வெளிப்படும் திறத்தை தோழியின் மூலம் எடுத்ததுக்காட்டப்பட்டுள்ளது. இப்பாடலில் 'நகுகம்' என்னும் சொல் வெளிப்படையாக வந்துள்ளதை அறியமுடிகிறது. அதனைத் தொடர்ந்து, இளமை குறிந்த விளக்கம், அகராதி தரும் விளக்கங்கள் தரப்பட்டுட்டுள்ளது. இளமைசுவை வெளிப்படுத்துவதை ஐங்குறுநூறு 121 ம் பாடலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பேதைமை என்னும் சுவை திருக்குறளில் வள்ளுவர் கூறும் கருத்துடன் விளக்கப்பட்டுள்ளது. இறுதியாக மடமை பற்றிய விளக்கி தலைவி மடமைவுற்றதனை ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென தோழி கூற்றின் மூலம் கூறப்பட்டுள்ளது. இது போன்ற 50 கும் மேற்பட்ட பாடல்களில் இடம்பெற்றிருக்கும் ஐங்குறுநூறு பாடல்கள் தொகுத்து வழக்கப்பட்டுள்ளது. முடிவுரையுடன் இறுதியாக செய்திகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

முன்னுரை

இலக்கிய வரலாற்றினை ஆராயும் போது செம்மொழி இலக்கியங்களுக்கு என தனித்தன்மை உண்டு. செம்மொழி இலக்கியங்களை அகம் புறம் என இரண்டாக இலக்கிய அறிஞர்கள் பிரித்துள்ளனர். மனிதன் தன் பற்பல அடிப்படை இயல்புகளையும், வாழ்க்கையின் எண்ணற்றச் செயல்பாடுகளையும் வெளிப்படுத்தும் ஊடகமாக அக இலக்கியங்கள் திகழ்கின்றது. அதனை வரையறை செய்யும் விதமாக இலக்கணங்கள் தோன்றியுள்ளது. அதிலும் மனிதனிடம் காணப்படும் உள்ளார்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தும் பெட்டகமாக மெய்ப்பாட்டியல் அமைந்துள்ளது. குறிப்பாக அகப்பாடல்களில் காணப்படும் மெய்ப்பாடுகள் தனிச் சிறப்பு வாய்ந்தவையாக உள்ளன. களவு, கற்பு வாழ்க்கையில், தலைவனுக்கும் தலைவிக்கும் இடையிலான உரையாடல்களில் மெய்ப்பாடு எவ்விதம் வெளிப்படுகின்றன என்பதை காட்டுவதாக இவ்விதழ் அமய உள்ளது. அந்த வகையில் எட்டுத்தொகை அக நூல்களில் ஒன்றான ஐங்குறுநூறு பாடல்களில் நகை மெய்ப்பாடு எவ்வாறு வெளிப்பட்டுள்ளது என்பதனை, அகப்பாடல்களின் வழியாகவும் அகமாந்தர்களின் கருத்துகளின் வழியாகவும் வெளிக்காட்டுவதாக இவ்வாய்வு மேற்கொள்ள இருக்கிறது.

கலைச்சொற்கள்

மெய்ப்பாடு, நகை மெய்ப்பாடு, எள்ளல் சுவை, இளமை சுவை, பேதைமைச் சுவை, மடமை சுவை, அகப்பாடல்கள், நகுதல்.

மெய்ப்பாடு

மெய்ப்பாடு என்பது வெளிப்படுவது என்று பொருள்படும். உற்றுநோக்கும் போது சுவையுணர்ச்சியே விருப்பு, வெறுப்பு முதலியவைகளை வெளிக்கொணர்வதாகவும், மெய்மயிர் சிலிர்த்தல் முதலிய மெய்க்குறிகளுடன் வெளிப்படுத்தும் சுவை மெய்ப்பாடாகும். தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுள் உறுப்புகளில் ஒன்றாக நகை என்னும் உறுப்பைக் கூறுகிறார். இதனை,

"உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்" (செய் - 196 நூற்)

எனும் பாடலில் யாதானும் ஒரு கூறிய முறையில் அதன் பொண்மையை மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடு என்கிறார் இளம்புரணார். "பேராசிரியர் இங்கு விளக்கம் கூறும்பொழுது மெய்ப்பாடென்பது சொற் கேட்டார்க்குப் பொருள் கண் கூடாதல் என எழுதுகிறார்" என்று (தமிழண்ணல், 2011) தம் நூலில் குறிப்பிடுகின்றார். மேலும், விளையாட்டு மாந்தரிடமாகத் தோன்றிய நகை முதலிய எண்வகை மெய்ப்பாடுகளும் பொருள், உணர்வு, மனக்குறிப்பு, வெளிப்பாடு என்ற நிலைகளில் வெளிக் கொணரப்படுகின்றன. மெய்ப்பாடு என்பது,

"உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்
மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே" (தொல். உரை. பக். 1)

என செயிற்றியம் கூறுகிறது. மெய்யின் கண் தோன்றுவது மெய்ப்பாடு ஆகும். மெய்ப்பாட்டியலின் புறநடையாக வரும் நூற்பாவில் மெய்ப்பாடு வெளிப்படும் திறத்தினைத் தொல்காப்பியர்,

"கண்ணினும் செவியினுந் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே" (மெய்ப், நூற் -27)

என்ற நூற்பாவில் அழகாகக் காட்டியுள்ளார். அக இலக்கியங்களில் காணப்படும் மெய்ப்பாடுகள் யாவும் விளையாட்டு ஆயத்தின்கண் தோன்றுவது என்பதை மெய்ப்பாட்டியல் முதல் நூற்பாவில் கூறுகிறார்.

மெய்ப்பாட்டு வகை

மெய்ப்பாட்டினைத் தொல்காப்பியர் எட்டுவகையாகப் பிரித்துள்ளார். அவை,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அம்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப" (மெய்ப். நூற் -3)

இவை அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடுகளாகும். இதனை ஆங்கிலத்தில் இலக்குவனார் கீழ்கண்டவாறு மொழிப் பெயர்த்துள்ளார். இதனை,

*"They say laughter, weeping, despisedness, wonder, fear, fortitude, anger and delight are the eight meyppadus" (சிவலிங்கனார், 1998)* எனத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி மற்றும் உவகை என்று எட்டாக பிறித்துள்ளார். இவற்றில் நகை மெய்ப்பாடு சிறப்பு கருதி முதலில் வைக்கப்பட்டுள்ளது. பிற மெய்ப்பாட்டிற்கான நிலைக்களன்களையும் அகப்புற மெய்ப்பாடுகளையும் வகைப்படுத்தி மெய்ப்பாட்டிற்கு எனத் தனி இயலை வகுத்துள்ளார் தொல்காப்பியர்.

நகை மெய்ப்பாடு

நகை என்னும் சொல்லுக்கு சிரிப்பு, சிரித்தல், மகிழ்ச்சி, நகுதல் என பல பொருள்கள் கொள்ளப் பெறும். வடமொழியில் 'ஹாஸியம்' என அழைக்கப்படுகிறது. நகை என்னும் சொல்லுக்கு இலக்கண உரையாசிரியர்கள் பல்வேறு விளக்கங்களைக் கூறுகின்றனர்.

இளம்புரணார்: நகை என்பது இகழ்ச்சியில் பிறப்பது.

பேராசிரியர்: சிரிப்பு, அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச்சிரித்தல் என மூன்றாக பிரித்துள்ளார்.

பாரதியார்: நகை என்பதை சிரிப்பு என்கிறார்.

இவ்வாறு பல்வேறு உரையாசிரியர்களும் நகை என்னும் சொல்லிக்கு பல விளக்கங்களைக் கூறியுள்ளனர்.

நகை மெய்ப்பாட்டின் நிலைக்களன்கள்

நகை தோன்றும் நிலைக்களன்களாக தொல்காப்பியர், மெய்ப்பாட்டியலில் நான்காகப் பகுத்துள்ளார்.

"எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்ப" *(மெய்ப். நூற் -4)*

எள்ளல் சுவை, இளமை சுவை, பேதைமைச் சுவை, மடமை சுவை எனப் பித்துள்ளார். இதனை, *"The say that Laughter has reproach, Youth, Foolishness and feigned ignorance. These four as its source" (சிவலிங்கனார், 1998)* என ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்துள்ளார் இலக்குவனார்.

அகப்பாடல்களில் நகை மெய்ப்பாடு

அகப்புற இலக்கியங்களில் நகை உணர்வுமிக்க பாடல்கள் பல இடம்பெற்றுள்ளது. குறிப்பாக குறுந்தொகையில் இடம்பெற்று பாடல் ஒன்று. வயலில் நிற்கும் மாமரத்தில் முற்றிலும் பழுத்து விழுந்த சுவையான கனியைப் பக்கத்தில் உள்ள நீர் நிலைகளில் திரியும் வாளைமீன் விழுங்கி வாழும் மருதநிலத் தலைவன்இ தலைவியின் வீட்டுக்கு வந்து இனிமையான சொற்களைப் பேசுகின்றான். ஆனால் தன் வீட்டிற்க்குப் போனாலோ அவன் புதல்வனின் தாயாகிய தன் மனைவியிடம் அவள் கூறுவதைக் கேட்டு கையையும் காலையும் தூக்கு என்றால் ஆடுகின்ற பொம்மைபோல் அவள் விரும்பியதைச் செய்வான். எனவே அவன்

செயல் நகைப்புக்குரியதாகும் என்று பரத்திக்கூற்றில் நகைச்சுவை எனும் மெய்ப்பாட்டு வெளிப்படுவதைக் காணலாம்.

"கழனி மாஅத்து விளைந்துஉரு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்மில் பெருமொழி கூறி தம்மில்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போலஇ
மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே" (குறுந் -08)

எனும் பாடலில் இடம்பெற்றுள்ளது. இதில், நகைச் சுவைக்குரிய பொருளைப் புறத்தே கொண்டு, அதன் வழியே தோன்றும் முறுவல் நகையுடன் அகத்தே மனமலர்ச்சியாகிய மகிழ்ச்சி தேன்றுமாறு வெளிப்பட்டு நகை வெளிப்படுவதைக் காணலாம். இதுபோன்ற பாடல் அக இலக்கியங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளது. ஐங்குறுநூறு ஐந்திணைச் செய்யுள்களில் நகை உணர்வுமிக்க பாடல்களில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும், அவர்களின் உரையாடல்களில் நகை மெய்ப்பாடு எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதைக் காண்போம்.

ஐங்குறுநூறு

குறுகிய பாக்களைக் கொண்டு மூன்று முதல் ஆறு அடிகளால் ஆனது. பாரதம் பாடிய பெருந்தேவனாரின் பாயிரம் தொகுத்தவர் புலத்துறை முற்றியக் கூடலூர்கிழார். தொகுப்பித்தோன் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை, ஐந்து திணைகளாகப் பகுத்து ஐந்துப் புலவர்களால், திணைக்கு நூறு பாடல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இதனை,

"மருதம் ஓரம்போகி நெய்தல் அம்மூவன்
கருதும் குறிஞ்சி கபிலர் - கருதிய
பாலை ஒதலாந்தை பனிமுல்லை பேயனே
நூலை ஓது ஐங்குறு நூறு" (துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு. 1978)

எனும் பழம் பாடலின் மூலம் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை, என்ற முறையில் ஆசிரியர்களின் பாடல்கள் இடம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது. ஐந்திணைப் பாடல்களில் நகை உணர்வுமிக்க பாடல்கள் இடம்பெற்றுள்ளது. அகப்பாடல்களில் நகை உணர்வு மிக்கப் பாடல்கள் பல உள்ளது.

ஐங்குறுநூறு பாடல்களில் நகை மெய்ப்பாடு

'நகை' என்னும் சொல் ஐங்குறுநூறு செய்யுள்களில் ஐந்து இடங்களில் வந்துள்ளது. எள்ளல், இளமை என்னும் சொற்கள் ஒரு இடத்திலும், பேதைமை, மடமை சொற்கள் மூன்று இடங்களிலும் இடம்பெற்றுள்ளது. நெய்தல் திணைப் பாடலில் தலைவனை ஏற்றுக்கொள்

என்றுத் தன்னை வந்து கேட்டுக் கொண்ட தன்னுடைய தோழிக்குத் தலைவி அதற்கு உடன்பட மறுக்கின்றாள். இதனை, அம்மூவனார்

"வெள்ளாங் குறுகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
மிதிப்ப நக்க கண்போ னெய்தல்
கட்கமழ் பானாத் துறைவற்கு
நெக்க நெஞ்சம் நேர்கல் லேனே." (துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு. 1978)

என்ற பாடலில் கூறியுள்ளார். இப்பாடலில் வெள்ளாங்குருகின் பறவைக் குஞ்சுகலென நினைத்து அன்போடு காணச்சென்ற நாரையின் மடச்செயலைக் கண்டு நகைப்பது போல மலர்ந்த கண் போன்ற நெய்தல் தலைவன் தேன்மணம் கமழும் துறைவனுக்கு, இன்னார் உறவல்ல என்னும் அருளினார் சென்ற தலைவன் பரத்தையின்பால் மயங்கி நடந்துக்கொண்ட நிகழ்ச்சியைப் குறித்து ஊர் பெண்கள் நகையாடினர் என்பதும், நெய்தலின் தேன்மணம் துறையெங்கும் கமழ்வது போல அவர் கூறும் பழிச்சொற்களும் ஊர் எங்கும் பரவி நிறைந்தன என்பதை உள்ளுறுத்து கூறுகின்றாள் தலைவி. அதனால் தலைவனைத் தான் ஏற்க மறுக்கின்றாள். இப்பாடலில் ஊரில் உள்ள பெண்கள் யாவரும் நகையாடினர் என்பதை மேற்கண்ட பாடலின் மூலம் அறியமுடிகிறது. 'நக்க' என்னும் சொல் 'நகுதல்' என்ற நகை பொருளைத் வெளிப்படையாகக் காணப்படுகிறது. நெக்க என்ற சொல்லும் நகைப் பொருளைத் தருகிறது. இப்பாடலில் வாயிலாக நகை மெய்ப்பாடு வெளிப்பட்டிருப்பதை அறியமுடிகிறது.

எள்ளல்

'எள்ளல்' – எனும் சொல்லின் இலக்கணம் பெயர்ச்சொல். இச்சொல், இகழ்ச்சி, நகைத்தல், தள்ளல், நிந்தை செய்தல், நிந்தித்தல், இழிவாகப்பேசல், சிரித்தல் என சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி (ஞானப்பிரகாசர். 1999) விளக்கம் கூறுகின்றன. நகை தோன்றும் நிலைக்கலன்களில் எள்ளல் முதலில் சிறப்பு கருதி வைக்கப்பட்டுள்ளது. பிறர் தம்மை எள்ளுதல் தாம் பிறரை எள்ளுதல் என இரு வகையாக கூறுகின்றனார். இதனை அகப்பாடல்கள் பறைச்சாற்றுகின்றன. தலைவனோடு உடன் போக்கிலே செல்வதற்குத் துணிந்து விடுகிறாள் தலைவி. நின்னை உடன் கொண்டுபோதல் பொருட்டாக தலைவன் வந்ததை அறிந்த தோழி, விளங்குதலான செவ்வரி பொருந்திய நின் விழிகளை நீயும் திறப்பாயாக நம் நலத்தைக் கவரும் பசலையை, அதுதான் இனிக் கெடுதலை நோக்கி, நாமும் நகையாடி மகிழலாம் என்பதை,

"இலங்குவீங் கெல்வகை ஆய்நுதல் கவினப்
பொலந்தேர்க் கொண்கன் வருந்தனன் இனியே

*விலங்கரி நெடுங்கண் ஞெகிழ்மதி*

*நலங்கவர் பசலையை நகுகம் நாமே!" (ஐங் -200)*

*என்ற இப்பாடலின் மூலம் நாம் எள்ளல் வெளிப்படும் திறத்தைக் காணலாம். நகுகம் என்னும்; சொல் பன்மைத் தன்மை கொண்டது. அவை, எள்ளல் நகை பற்றி பிறப்பதாக தோழியின் வாயிலாக வெளிப்பட்டுள்ளது. நகை என்னும் புதிய சொல்லிற்கு மாறுபட்ட சிறப்புத் தன்மைக் கொண்ட சொல்லாக 'நகுகம்' எனும் சொல் இடம்பெற்றுள்ளது.*

இளமை

*இளமை என்பது மழவு. அதாவது பிள்ளைத்தன்மை என்கிறார் நாவலர் பாரதியார், "இளமை என்பதற்கு மென்மை, பாலியல், யௌவனம், தாழ்வு, அறிவு முதிராமை, மயக்கம், காமம்"* போன்ற பொருட்களை வழங்குகிறது. *(ஞானப்பிரகாசர். 1999)* சொற்பிறப்பு ஒப்பியல் *தமிழ் அகராதி தலைவன் பரத்தை புறவினன் என்று தவறாக அறிந்து, அவனோடு புலந்து ஒதுங்குகின்றான் தலைவி. அதனை நீங்கிக் கூடியின்புறவும், தலைவியை தெளிவிக்க தான் ஏதும் பிழை பாடாக நடத்திலன் என்று தோழிக்கு உறுதிகூறி, அவள் உதவியை நாடுகிறாள். அவள் தலைவியின் இளமைப்பற்றிச் சொல்லி, அவளை நகையாடி,*

*"கண்டிகும் அல்லகோ, கொணக நின் கேளே!*

*முண்டகக் கோதை நனையத்*

*தெண்டிரைப் பௌவம் பாய்ந்துநின் றோனே! (ஐங் -121)*

*தோழி பாடுவதாக அம்மூவனார் தம் பாடலில் எடுத்துக்கூறியுள்ளார். இப்பாடலில் தோழிக்குத் தலைமகன் கூற, புலவியை நீக்கக் கருதிய தோழி அவள் இளமை கூறும்போது மகளிர் கடலில் படித்தாடுங்கால் தம்மை கழிமுண்டத்தின் புவால் கொடுக்கப்பட்ட மாலையணிந்து ஒப்பனை செய்து கொண்டு ஆடுதல் மரபாகும். கேள்வன் துணையாக, நீராடும் உவகை மிகுதியால் ஒப்பனை செய்யப்பட்ட கூந்தல் திரையால் நனைவதை பலரும் அறிந்தமையால் அவளைக் கேளல்லள் எனலும் ஆகாது என நகையாடிச் சொல்லு பாங்கு நெய்தல் திணையில் வெளிப்படுகிறது. இப்பாடலின் மூலம் தலைவியிடம் இளமை தன்மை வெளிப்படுவதை தோழியின் கூற்றின் வாயிலாக அறிய முடிகிறது.*

பேதைமை

*பேதைமை என்னும் சொல் இறிவின்மை, அறிவிலான், அறிவினர், கீழ்மக்கள், சிறுபெண்கள் எனப் பல பொருளை தருகிறது. இலக்கியங்களில் பல இடங்களில் இடம்பெற்றுள்ளது. வள்ளுவர் பேதைமை என்னும் அதிகாரத்தை பொருட்பாலில் உள்ள நட்பியலில் தனியே வைத்துள்ளார்.*

*"பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு*

*உதியம் போக விடல்" (குறள் - 831)*

*என்ற குறளில் அறியாமை என்று சொல்லப்படுவதொன்று யாதெனில், அது குற்றம் பயப்பனவற்றைக் கொண்டு நன்மை பயப்பன வற்றைப் போகவிடல் எனப் பேதைமை தன்மையினைப் பற்றி திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதனை, ஐங்குநுறூறு பாடல் கடலின் அலைகளின் சிறப்பும், மணல் பரந்த உயர்ந்த கரையிடத்தேயும், முண்டகத்தின் நறுமலர்களின் மணம் கமழ்ந்து கொண்டிருப்பது தொண்டிப்பட்டினம். அதனைப் போன்ற நலமிக்கவளான தோழி அடைந்தோர், தாம் தம்மிடத்தே தவறேதும் உடையரல்லாராயினும் தவறினார் போன்றே தளர்ந்து நடுங்குவர் என்பதை,*

*"தவறில ராயினும் பனிப்ப மன்ற*
*இவறுதிரை திளைக்கும் இடுமணல் நெடுங்கோட்டு*
*முண்டக நறுமலர் கமழும்*
*தொண்டி யன்னோள் தோள்உற் றோரே!" (ஐங் -117)*

*என்ற பாடலில் தலைவியின் பேதைமையை உணர்த்தியது தோழியின் உரையாடலில் வெளிப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. தொல்காப்பியம் கூறும் பேதைமை உணர்வு ஐங்குறுநூறு பாடல்களில் பல்வேறு இடங்களில் காணமுடிகிறது.*

*மடமை*

*மடமை என்பது மூடத்தனம், அறியாமை, முட்டாள்தனம் எனப் பலப் பொருள் கொள்வர். "மடமை - அறிவின்மை, கபடின்மை. மடம் - அறியாமை, அழகு: மென்மை, மடமை, இளமை, கொளுத்ததுக் கொண்டு கொண்டது விடாமை" (கழக ஆசிரியர்கள், முதல் பதிப்பு) கழகத் தமிழ் அகராதி பொருள் தருகிறது. மடமை, மடம், மடன், அறியாமை, அறிவிலான் என்னும் சொற்கள் அறியாமையினால் தோன்றுவதாக உள்ளது. தலைவனிடமிருந்து உண்மையினை அறிவதற்காகச் சொல்லப்படும் குற்றச்சாட்டாகலாம் காமஞ்சாலா இளமை ஓசையும் நாடிப் பின்செல்லும் நீ மடமையுற்றாய் இதனை,*

*"கண்டிகும் அல்லகோ, கொணக நின் கேளே!*
*ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென*
*வெள்ளாங் குருகை வினவு வோளே" (ஐங் -122)*

*என்ற பாடலில் எளிதில் கிடைக்கும் இழையினை எடுத்துக் கொள்ளாத வெள்ளாங்குறுகு என்னும் கடல் பறவையிடம் புலம்புகிறாள். இழையின் பயன் அறியாத திறனில்லாத குருகிடம் வினவும் இடத்து தலைவியின் மடமை வெளிப்படுகிறது. தலைவி தலைவனை உணராது செயல்படும் தன்மையில் மடமை நகை வெளிப்பட்டிருப்பதை காணமுடிகிறது.*

*இது போன்று பல பாடல்களிலும் நகை மெய்ப்பாடு வெளிப்படும் பாடல்கள் காணப்படுகிறது இப்பாடல்கள் யாவும் அகவாழ்க்கையில் நகுதல் பொருட்டு வெளிப்பட்டு உள்ளன. நகை மெய்ப்பாடின் நிலைக்களன்களான எள்ளல், இளமை, பேதைமை, மடமை*

என இவை யாவும் மேற்கண்ட பாடல்கள் வாயிலாக அறியலாம். ஐங்குறுநூறு --- 24, 29, 47, 58, 70, 150 - 160, 193, 200, 240, 288, 376, 336, 328, 410, 444, 450, 479… போன்ற 50கும் மேற்பட்ட பாடல்களில் நகை மெய்ப்பாடு இடம்பெற்றுள்ளது.

முடிவுரை

மனிதன் தன் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு துன்பங்கள் இருப்பினும் மகிழ்வுடன் வாழ்வதற்க்கு நகையுணர்வினை வெளிப்படுத்துதல் இன்றியமையாத ஒன்றாகும். மனித வாழ்வில் நகை உணர்வுடன் வாழ்ந்தால் மனநலமும், அதன் மூலம் உடல் நலமும் அடைய முடியும் என்பதை அகப்பாடல்கள் வாயிலாக நம்மால் அறிய முடிகிறது. அகப்பாடல் யாவும் மக்களின் நடத்தையினை வெளிக்காட்டுவதாக அமைகின்றன. நகை உணர்வு மிக்கப் பாடல்கள் யாவும் சிறந்த மெய்ப்பாட்டு உணர்வினை இலக்கியங்களில் வெளிப்படுத்துகின்றத் தன்மையினை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது. அம்மூவனார் பாடிய நெய்தல் திணைப் பாடல்களில் பிற புலவர்களைக் காட்டிலும் நகை தோன்றும் பாடல்கள் அதிகமாக காணப்படுகின்றன. நகை மெய்ப்பாடு கொண்டப் பாடல்களில் பெரும்பாண்மை பாடல்கள்கள் தோழிக் கூற்றில் அமைந்துள்ளது. இப்பாடல்களில் நெக்க, நக்க, நகுதல், மடமை, எள்ளல், நகை என்ற செறக்கள் இடம் பெற்றுள்ளது. மேற்கண்ட ஆய்வின் மூலம் ஐங்குறுநூற்று செய்யுகளில் காணப்படும் நகை உணர்வுமிக்கப் பாடல்களை அறிய முடிகிறது.

மேற்கோள்கள்


- இளங்குமரனார், இரா, தொல்காப்பியம் தெளிவுரை, பொருளதிகாரம்- இரண்டாம் பாகம், நான்காம் தமிழ்ச் சங்கம், மதுரை, பதிப்பு, 2018,
- இளம்புரணார், தொல்காப்பியம், பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், 14 -ம் பதிப்பு, ஜீன் 2011,
- சிவலிங்கனார், ஆ. தொல்காப்பியம், உரைவளம், பொருளதிகாரம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பதிப்பு, 1998.
- துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு. செவ்விலக்கியக் கருவுலம் - 7, ஐங்குறுநூறு - 1, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை - 17, பதிப்பு, 2008.
- ஞானப்பிரகாசர். ச, சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி, பதிப்பு : 1999
- துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு. ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், சிதம்பரம், பதிப்பு, 1978, பக்கம் - 356, புறவுரை. 151 பாடல்
- கௌமாரீஸ்வரி. எஸ், பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம் சென்னை -600 005, பதிப்பு, மார்ச்சு 2009.
- கழக ஆசிரியர்கள், கழகத் தமிழ் அகராதி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை- 1